<u>சார்பு நீதிமன்றம். துறையூர்</u>

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக்,M.A,M.L.,**

**சார்பு நீதிபதி,**

**துறையூர்.**

**2026ம் ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04ம் நாள் புதன்கிழமை**

## <u>EA.No.10/2025 in EP.No.26/2020</u>

R. ராமர்

.....மனுதாரர்/தீர்ப்பு கடனாளி

/எதிராக/

1. M. பாபு

..... எதிர்மனுதாரர்/
தீர்ப்பாணை பெற்றவர்

2. முருகானந்தம் .... ஏலம் எடுத்தவர்/3-ம் தரப்பினர்

இம்மனு கடந்த 27.02.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/தீர்ப்பு கடனாளி தரப்பில் வழக்கறிஞர் திரு.T. ராமசாமி அவர்களும், எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A. பால்ராஜ் அவர்களும், ஏலம் எடுத்தவர்/3-ம் தரப்பினர் தரப்பில் வழக்கறிஞர் திரு. T.V.செந்தில்குமார் அவர்களும் ஆஜராகியும் இருதரப்பு வாதம் கேட்டும், இருதரப்பு மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்தும் நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

நிறைவேற்று மனுவில் உள்ள E.A.No.9/2025 என்ற மனுவிலும், அபிடவிட்டிலும் E.P.No.36/2020 என்பதற்குப் பதிலாக E.P.No.26/2020 என திருத்தம் செய்யவும், E.A.No.9/2025 மனுவில் குறுந்தலைப்பில் அடுத்துள்ள மேற்படி நெம்பரில் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி என்பதற்கு பின்னிட்டு சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 92 என்பதற்குப் பதிலாக சிபிசி ஆர்டர் 21 ரூல் 90 என திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உ.வி.மு.ச கட்டளை 21 விதி 17(2) மற்றும் சி.பி.சி 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் தாக்கல் செய்த மனுசுருக்கம்:-</u>**

**(2.1)**மனுதாரர் இந்த நிறைவேற்று மனுவில் தீர்ப்பு கடனாளி ஆவார். மேற்படி நிறைவேற்று மனுப்படி குறிப்பிட்டுள்ள தொகையை வசூல் செய்யும் பொருட்டு மனுதாரருடைய சொத்துக்களை ஏலத்துக்கு கொண்டு வந்து, ஏலத்தேதி

24.09.2025ம் தேதியன்று வைக்கப்பட்டு மனுதாரர் பல தடவைகள் இந்த வழக்கிற்காக ரூ.3,15,000/-(ரூபாய் மூன்று இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) செலுத்தியுள்ளார். மனுதாரர் கடந்த 24.09.2025ம் தேதி தொகையை செலுத்த தயாராக இருந்தார். ஆனால் மாண்புமிகு நீதிபதி அவர்கள் விடுப்பில் இருந்ததால் தொகை செலுத்த முடியாமல் போய்விட்டது. மேலும் இஸ்தியர் மனுதாரருக்கு ஏல முன்அறிவிப்பு கொடுக்காமல் தீர்ப்பாணை பெற்றவரின் கருத்தை மட்டும் கேட்டு இந்த ஏலத்தை விட தவறான தகவல்களை மாண்புமிகு நீதிமன்றத்தில் தகவல் கொடுத்துள்ளார். இதை பயன்படுத்தி தீர்ப்பாணை பெற்றவர் தனக்கு வேண்டியப்பட்டவரை முருகானந்தம் என்பவரை பினாமியாக வைத்துக் கொண்டு, மனுதாரர் சொத்துக்களை நீதிமன்றத்தில் ஏலம் எடுத்துவிட்டார். அவ்வாறு ஏலம் எடுத்தது செல்லத்தக்கதல்ல. எனவே இந்த ஏலம் Irregular Sale ஆகும்.

(2.2)மனுதாரர் மாண்புமிகு நீதிமன்றத்தில் மனுதாரருடைய சொத்தை முருகானந்தம் என்பவர் எடுத்த ஏலத்தை ரத்து செய்ய வேண்டி E.A.No.9/2025 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்து அந்த மனுவில் E.P.No.26/2020 என்பதற்கு பதிலாக E.P.No.36/2020 என தட்டச்சு செய்யப்பட்டும், அதற்கான மனுவில் கூட்டப்பிரிவு சிபிசி கட்டளை 21 விதி 90 என்பதற்குப் பதிலாக கட்டளை 21 விதி 92 என தவறுதலாக குறிப்பிடப்பட்டுவிட்டது. மேற்படி தவறுதலும் எழுத்துப் பிழைகளாகும். மேற்படி தவறுகள் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டு விட்டது. அந்தவகையில், இந்த எதிர்மனுதாரர் பாபுவும் மாண்புமிகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள தனது எதிர்மனுவுரையில் குறிப்பிட்டுள்ளார். எப்படியிருந்த போதிலும், மேற்படி தவறுகளை திருத்தம் செய்வதால் இந்த எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. எனவே மேற்படி நெம்பரில் உள்ள நிறைவேற்று மனுவில் உள்ள E.A.No.9/2025 என்ற மனுவிலும், அபிடவிட்டிலும் E.P.No.36/2020 என்பதற்குப் பதிலாக E.P.No.26/2020 என திருத்தம் செய்யவும், E.A.No.9/2025 மனுவில் குறுந்தலைப்பில் அடுத்துள்ள மேற்படி நெம்பரில் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி என்பதற்கு பின்னிட்டு ஆர்டர் 21 ரூ 92 என்பதற்குப் பதிலாக சிபிசி ஆர்டர் 21 ரூல் 90 என திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்திரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தாக்கல் செய்த எதிருரை சுருக்கம்</u>

(3.1)மனு மோசடி. நி.ம.இ.எண்.9/2025-த்திற்கு காட்டியுள்ள நிறைவேற்று மனு எண்.36/2020 என்பதை நி.ம.எண்.26/2020 என திருத்தம் செய்ய வேண்டும் என மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி கொடுத்துள்ள மனு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இந்த தவறை இந்த எதிர்மனுதாரர் தனது எதிர்மனுவுரையில் சுட்டிக்காட்டியுள்ளார். சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 92 சட்டப்பிரிவில் எப்போது ஏலம் ஊர்ஜிதம் படுத்தவேண்டும்

என்பதற்கும், ஏலம் சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 89. சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 90, சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 91 படி ரத்து செய்யப்படும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் பற்றி கூறப்பட்டுள்ளதே ஒழிய சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 92 படி தாக்கல் செய்யப்படும் மனுவில் ஏல நடவடிக்கைகள் சரியல்ல என காரணத்தை காட்டி ஏலத்தை ரத்து செய்ய பரிகாரம் கேட்பதற்கு வழிவகையில்லை என்பதை இந்த எதிர்மனுதாரர் நி.ம.இ.எண்.9/2025-ல் சுட்டிக்காட்டியுடன் இம்மனுவை மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி தாக்கல் செய்துள்ளார். நடந்து முடிந்த ஏலத்தைப் பொறுத்து தீர்ப்புக் கடனாளி அல்லது அவரை சார்ந்தவர்கள் பிரசித்த அறிக்கையில் கண்ட தீர்ப்பாணைப் பெற்றவருக்கு கொடுக்க வேண்டிய தொகையும் ஏலம் எடுத்தவருக்கு ஏல தொகையில் கொடுக்க வேண்டிய 5% தொகையும் கொடுத்து ஏலத்தை ரத்து செய்ய சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 89 படி மனு தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு மனு தாக்கல் செய்வதற்கு முன் நிறைவேற்று தொகையை செலுத்த வரையறை உள்ளது. அதனடிப்படையில் சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 89 படி மனு கொடுக்க ஒரு கால வரையறை உள்ளது. அந்த கால வரையறைக்குள் சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 89 படி ஏலம் ரத்து செய்யப்பட வேண்டும் என்றால் ஏலத்தொகையில் 5% வீத தொகை ஏலம் எடுத்தவருக்கு தீர்ப்புக்கடனாளி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார். இதனை தவிர்ப்பதற்காகவே மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 89 படி மனு தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே தவறான ஒரு சட்டப்பிரிவில் மனுவை தாக்கல் செய்துவிட்டு தற்பொழுது அதனை சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 90 என திருத்தம் செய்ய வேண்டும் என இம்மனுவை கொடுத்துள்ளார். ஏல நடவடிக்கைகளில் ஏதேனும் தவறு இருந்தால் தான் ஆர்டர் 21 ரூல் 90 படி மனு கொடுக்க முடியும்.

(3.2)நடைபெற்ற ஏலத்தில் ஏதேனும் குறிப்பிடத்தக்க ஒழுங்கீனம் அல்லது மோசடி நடைபெற்றிருந்தால் அதனை சுட்டிக்காட்டி சி.பி.சி ஆர்டர் 21 ரூல் 90 படி தீர்ப்புக் கடனாளி மனு தாக்கல் செய்ய முடியும். ஆனால் நடைபெற்ற ஏல நடவடிக்கைகளில் எந்த தவறும் நடந்ததாக மனுதாரர் மனுவில் கூறவில்லை. ஏலம் எடுத்த முருகானந்தம் என்பவர் இந்த எதிர்மனுதாரரின் பினாமிதாரர் என்று கூறியிருப்பது வழக்கமாக இது மாதிரியான மனுக்களில் எல்லோரும் கூறக்கூடிய ஒரு பொதுவான வாதமே ஒழிய மேற்படி சங்கதி சற்றும் உண்மையல்ல. முருகானந்தம் என்பவர் இந்த எதிர்மனுதாரரின் பினாமிதாரர் அல்ல. மேற்படி முருகானந்தம் என்பவர் ஏலம் எடுப்பதற்கு தனியாக வழக்கறிஞர் நியமித்துள்ளார். அவர் மூலமாகவே நீதிமன்றத்தில் ஏலம் எடுத்த தேதியிலும் பின்னிட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் மீத தொகையையும் நீதிமன்றத்தில் முருகானந்தம் செலுத்திவிட்டார். எதிர்மனுதாரர்/தீர்ப்பாணைப் பெற்றவரின் பினாமிதாரர் என்று கூறுவது சற்றும் உண்மையல்ல. 24.09.2025 -ம் தேதி மனுதாரர் /தீர்ப்புக்கடனாளி தீர்ப்பாணைத் தொகையை செலுத்த தயாராக இருந்ததாகக் கூறுவது முற்றிலும் உண்மையல்ல. மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி இந்த வழக்கில் மேற்கொண்ட கடந்த கால

நடவடிக்கைகளை உற்றுநோக்கினாலே மனுதாரர் / தீர்ப்புக்கடனாளி 24.09.2025-ம் தேதி தீர்ப்பாணைத் தொகையை செலுத்த தயாராக இருந்ததாகக் கூறுவது முற்றிலும் உண்மையல்ல என்பது தெள்ளத்தெளிவாக தெரியவரும்.

(3.3)உண்மையில் காசோலை மீது தொடரப்பட்ட எஸ்.டி.சி.399/2018 வழக்கில் சமரச தீர்ப்பு ஏற்பட்டது. இந்த எதிர்மனுதாரர் வசமிருந்த காசோலைகளை மனுதாரர் பெற்றுக்கொண்டார். ஆனால் பேசிய படி 08.07.2019- தேதிக்குள் தொகையை செலுத்தாததால் நி.ம.எண்.58/2019-ல் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் மேற்கண்ட வகையில் 26.11.2019-ம் தேதி ரூ.10,000/ 11.12.2019-ம் தேதி ரூ.25,000/-ம் நீதிமன்ற குறிப்புகளின் படி வரவு வந்தது. பிறகு மனுதாரர் எஞ்சிய தீர்ப்பாணை தொகையை செலுத்தாததால் கைது செய்யப்பட்டு சிவில் ஜெயிலில் அடைக்கப்பட்டார். இந்நிலையில் மனுதாரருக்கு வேண்டியவர்கள் என சில நபர்கள் இந்த எதிர்மனுதாரரை சந்தித்து சிவில் ஜெயிலிலிருக்கும் மனுதாரர்/தீர்ப்புக்கடனாளியை விடுவிக்க இந்த எதிர்மனுதாரர் ஒத்துழைப்பு கொடுத்தால் ஜெயிலிலிருந்து திரும்பி வந்தவுடன் ஒரு மாத காலத்தில் தீர்ப்பாணை கடன் பூராவையும் திருப்பி செலுத்தி விடுவதாக கூறி நம்ப வைத்து ரூ.2,00,000/ - மட்டும் 07.03.2020-தேதியில் தொகை செலுத்தியதில் இந்த எதிர்மனுதாரரும், மனுதாரரை ஜெயியிலிருந்து விடுவிக்க சம்மதம் தெரிவித்தார்.

(3.4)அதன் பின்னரும் தொகையை செலுத்த தவறியதால் 2-வது நிறைவேற்று மனுவாக மனுதாரரின் சொத்தினை ஏலத்திற்கு கொண்டுவர இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிறைவேற்று மனுவிலும் ரூ.2,40,000/-த்தை பகுதி பகுதியாக செலுத்தியதால் இந்த எதிர்மனுதாரர் தொகையை பெற்றுக்கொள்ள மறுத்ததால் மனுதாரர் நீதிமன்ற வைப்பீட்டில் வைத்துள்ளார். தொகையை பகுதி பகுதியாக கொடுத்து தீர்ப்பாணைப் பெற்றவருக்கு கஷ்டத்தையும், நஷ்டத்தையும் ஏற்படுத்தினார். இந்நிலையில் தான் 24.09.2025-ம் தேதி ஏல பிரசித்தம் செய்யப்பட்டது. மனுதாரர் உண்மையிலேயே தீர்ப்பாணைத் தொகைக்கு தொகை செலுத்தத்தயாராக இருந்திருப்பாரேயானால் பாக்கி தீர்ப்பாணைத் தொகை முழுவதையும் நீதிமன்றத்தில் செலுத்த நடவடிக்கை எடுத்திருப்பார் அல்லது தீர்ப்பாணைப் பெற்றவரின் வழக்கறிஞரிடமோ அல்லது தீர்ப்பாணை பெற்றவருக்கோ தொகையை செலுத்தி ஏலத்தை தவிர்த்திருப்பார். அல்லது குறைந்தபட்சமாக ஏலமிட்ட அதிகாரியின் முன்பு தொகையை செலுத்தி ஏலத்தை தவிர்த்திருப்பார். இதெல்லாம் செய்யாமல் இருந்துவிட்டு ஏதோ தீர்ப்பாணைத்தொகையை செலுத்துவதற்கு தயாராக இருந்ததுபோல தொகையை பொய் உரைத்துள்ளார்.

(3.5)சொத்து ஏலம் போய்விட்டபடியால் தற்பொழுது எப்படியாவது ஏலமிடுத்தவருக்கு சட்டப்படியான 5% தொகை கொடுக்காமல் ஏலத்தை ரத்து

செய்துவிடலாம் என்ற எண்ணத்தில் சமூகம் நீதிமன்ற அவர்களின் விடுப்பை நொண்டிச்சாக்காகக் கூறி இம்மனு கொடுக்கப்பட்டுள்ளதே ஒழிய வேறு ஒன்றுமில்லை. தீர்ப்பாணை பெற்றவரின் கருத்தை மட்டும் கேட்டு மனுதாரருக்கு ஏல முன்னறிவிப்பு இல்லாமல் ஏலம் விடப்பட்டதாகக் கூறியிருப்பது மனுதாரர் மனமறிந்த பொய். நிறைவேற்று நடவடிக்கைகளில் இதே சங்கதியைக் கூறி மனுதாரர் Counter objections 24.09.2024–ம் தேதி தாக்கல் செய்ததில் அதற்கு பிறகு முறையான ஏல அறிவிப்பு பிரசித்தம் செய்யப்பட்டு மேற்கண்ட தேதிகளில் ஏல அறிவிப்பு ஏற்பட்டதில் அவ்வப்போது ஏல ஒத்திவைப்பு மனு தீர்ப்புக்கடனாளி/மனுதாரர் தாக்கல் செய்து வந்துள்ளார். எனவே ஏல முன்னறிவிப்பு தனக்கு வழங்கப்படவில்லை எனக்கூறுவது ஏற்புடையதல்ல. ஏலம் எடுத்தவர் தீர்ப்பாணைப் பெற்றவருக்கு வேண்டப்பட்டவர் என்று கூறியிருப்பதும் தீர்ப்பாணைப் பெற்றவர் பினாமியாக வைத்து ஏலம் எடுத்துவிட்டதாகக் கூறுவதெல்லாம் முற்றிலும் உண்மையல்ல. ரத்து மனுக்களில் கூறக்கூடிய பொதுவான சங்கதிகளையே மனுதாரர் கூறியுள்ளார். 2018-ம் ஆண்டிலிருந்து காசோலைத் தொகையைப் பெற தீர்ப்பாணை பெற்றவர் போராடிக் கொண்டு வருகிறார். இந்த மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

4.இருதரப்பு மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**<u>தீர்வு..</u>**

(5.1)இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்/தீர்ப்பு கடனாளி இம்மனுவை E.A.No.9/2025 மனுவில் நிறைவேற்று மனு எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், அதனை திருத்தம் செய்ய வேண்டும் எனவும், அதேபோன்று மனு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 91 விதி 90 என திருத்தம் செய்ய வேண்டியும், மேற்படி பிழை தவறுதலாக ஏற்பட்டுவிட்டது எனவும், மனுவில் கோரியுள்ள திருத்தப்பாடு அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு கஷ்டமும், நஷ்டமும் இல்லை என தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபனை தெரிவித்து E.A.No.9/2025 மனு பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள சங்கதிகளுக்கான எதிர்வாதங்களை தெரிவித்து E.A.No.9/2025 -ல் குறிப்பிட்டுள்ள மனுவின் சட்டப்பிரிவுகளை திருத்தம் செய்ய வேண்டியுள்ளது ஏற்புடையதாக இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.2)மனு பிரமாண வாக்குமூலம் சங்கதிகளை மறுத்து தீர்ப்பு கடனாளி 7 ஆண்டுகளாக தீர்ப்பாணை தொகையை வட்டியுடன் செலுத்தாமல் இருந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை எனவும், உண்மையிலேயே மனுதாரர் தீர்ப்பாணை தொகையை செலுத்த விருப்பப்பட்டவராக

இருந்தால் கட்டளை 21 விதி 89-ன் படி தனக்குள்ள சட்ட உரிமையை பயன்படுத்தி தொகையை செலுத்தி ஏலத்தை ரத்து செய்ய மனு கொடுப்பதற்கு உரிமை உண்டு எனவும், தெரிவித்து இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. E.A.No.9/2025 மனு கடந்த 24.09.2025-ம் தேதி நீதிமன்றம் மூலம் ஏலம் விடப்பட்டுள்ளது முறையாக இல்லை எனவும், ஏல முன்னறிவிப்பு கொடுக்காமல் தீர்ப்பாணை பெற்றவர் முருகானந்தம் என்பவரை வைத்து ஏலம் எடுத்துள்ளது செல்லத்தக்கதல்ல என தெரிவிக்கப்பட்டு அம்மனு உ.வி.மு.ச கட்டளை 21 விதி 92-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அம்மனுவில் நிறைவேற்று மனு எண் தவறுதலாக 36/2020 என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இம்மனுவில் வேண்டியுள்ள திருத்தப்பாடு நிறைவேற்று மனு எண்.26/2020 என திருத்தம் செய்யவும், சட்டப்பிரிவு உ.வி.மு.ச கட்டளை 21 விதி 90 என திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. ஆகையால் இம்மனு திருத்தப்பாடு E.A.No.9/2025 மனுவின் தன்மையை மாற்றப்போவதில்லை. இம்மனு அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்டமும் நஷ்டமும் இல்லை. E.A.No.9/2025 மனு திருத்தப்பாடு செய்யப்பட்ட பிறகு அதில் தேவைப்படும் பட்சத்தில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்துகொள்ளலாம் என்பதாலும் E.A.9/2025 மனுவின் தன்மை மற்றும் நிலைக்கும் நிலை குறித்து அம்மனு உத்தரவில் விவாதிக்கலாம் என்பதால் மனுதாரருக்கு பின்னிட்டு ஏற்படும் வழக்குகளை தவிர்க்க ஒரு வாய்ப்பு வழங்கி இம்மனு நீதியின்பால் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இன்று 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 04-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd)/- C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.

**மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் .. இல்லை.**

(Sd)/- C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.